00010

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 03

**LLU 3303 – உரோமன் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II 2023/2024

**காலம் : ஒரு (01) மணித்தியாலங்கள்**

திகதி : 06.01.2025 நேரம்: மு.ப. 09.30 - மு.ப. 10.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02).
ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. ஒகஸ்ரா என்பவளை மணம் முடித்த லூக்கஸ் என்பவன் 20 வயது நிரம்பிய துலியா மற்றும் 16 வயது நிரம்பிய பெலோனா ஆகியோரின் குடும்பத்தாதை ஆவான். (*pater familia*) லூக்கஸ் வங்குரோத்து நிலைமையை அடைந்தமையால் தனது குடும்பத்தை பராமரிக்க முடியாமல் இருந்தான். ஆகவே 60 வயது நிரம்பிய செல்வந்த உரோம பிரஜையான ஒக்டாவியஸ், லூக்கஸ் ஐ மகவேற்பு செய்தான்.

ஒக்டாவியசை வெறுத்த துலியா குடும்பத்தை விட்டகன்று 30 வயது நிரம்பிய பிறிஸ்கா என்பவளுடன் கூடி வாழ்ந்தாள். பிரிஸ்கா, டெசிமஸ் என்பவனை ஏற்கனவே திருமணம் புரிந்திருந்தாள் என்பதனை துலியா அறிந்திருக்கவில்லை. துலியா *usus* மூலமான வலிதான திருமணம் ஒன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்தாள்.

ஒக்டாவியஸ், பெலோனாவிற்கு தனது நண்பர் ஒருவருடைய மூத்த மகனான நீறோவுடன் திருமண ஏற்பாட்டை மேற்கொண்டான். நீறோ மனநோயினால் பாதிக்கப்பட்டு இருந்ததை அறிந்த லூக்கஸ் மற்றும் பெலோனா ஆகியோர் திருமணத்தை எதிர்த்தனர். லூக்கஸ் மற்றும் பெலோனா ஆகியோருடைய எதிர்ப்புகள் இருந்த போதும் திருமணம் நடைபெற்றது.

ஒரு சில மாதங்களின் பின்பு நீறோ தனது மனநோய் காரணமாக பெலோனாவை அடித்து சித்திரவதைக்கு ஆளாக்கினான். பெலோனா அவளுடைய குடும்பத்தாதையிடம் திரும்பி வந்ததுடன் நீறோவிடம் இருந்து விவாகரத்து கோரினாள். இதேவேளை, பெலோனா சோரம் போன பெண் என நீறோவுடைய தந்தை குற்றம் சாட்டியதுடன் விவாகரத்திற்கு பின்பு நீறோவுடன் *dos profectitia* தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டான்.

மேலே விபரிக்கப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து எழுகின்ற சட்டப்பிரச்சினைகளை உரோமச்சட்டத்தின் கீழ் ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

2. ஜஸ்ரீனியன் காலப்பகுதிகளில் வாழ்ந்த செல்வந்த உரோம பிரஜையான கசியஸ் தனது ஆதனங்களை இறுதி விருப்பு ஆவணம் மூலம் கையளிக்க விரும்பினான். அவன் 14 மற்றும் 16 வருடங்கள் நிரம்பிய தனது மூத்த மகன்களையும் 10 வயது நிரம்பிய இளைய மகனையும் வாரிசுகளாக குறிப்பிட எண்ணினான். எனினும் கசியஸ், துலியஸ் 10 வயது நிரம்பிய சிறுபராயத்தைக் கொண்டமையால் தனது வாரிசாக நியமிக்கத் தயங்கினான். மேலும் கசியஸ் தனது மகளான கிரேசினியாவின் திருமண நாளன்று கணிசமான அளவு சீதனத்தை வழங்கியதன் காரணமாக தனது சொத்துக்களை அவள் உரித்துக் கொள்வதிலிருந்து நீக்க விரும்பினான். கசியஸ் அவனுடைய விடுதலை பெற்ற மகனையும் இறுதி விருப்பாவணத்தின் ஏனைய மகன்மார்களுடன் சேர்த்துக்கொள்ள விரும்பியதுடன் தனது அதிக விசுவாசமுடைய அடிமையையும் நீக்க விரும்பினான்.

மேலே தரப்பட்ட சூழ்நிலைகளில் உள்ள சட்ட நிலைமைகள் பற்றி உரோமன் சட்டத்தின் கீழ் பிரயோகிக்கப்படும் சட்ட எண்ணக்கருக்களையும் காரணங்களையும் கொண்டு கசியஸ் இனுடைய சட்டநிலைமை பற்றி அவனிற்கு அறிவுறுத்துக.

**(20 புள்ளிகள்)**

**- முழுப்பதிப்புரிமையுடையது -**